ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1775/7 - 2012 සැප්තැම්බර් මස 11 වැනි අඟහරුවාදා - 2012.09.11

*1775/7 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்***

*மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புதல்*

*மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பினரொருவர் இறந்துபோனதன் காரணமாக, மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் உறுப்பாண்மையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்று, 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65 (1) ஆம் பிரிவின் கீழ் மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் செயலாளர் எனக்கு அறிவித்துள்ளார் ஆதலாலும் ;*

*அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கெனத் தகவுடைய ஆளொருவரைப் பெயர் குறித்து நியமிக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் 65 (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் தேவைப்படுத்தப்பட்டுள்ளார் ஆதலாலும் ;*

*மேற்கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கென திரு. உஜித் அநுராத என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;*

*தேர்தல்கள் ஆணையாளரான மஹிந்த தேசப்பிரிய ஆகிய நான், 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 65 (2) ஆம் பிரிவின் நியதிகளின்படி செயலாற்றி திரு. உஜித் அநுராத என்பவர் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதான மாத்தளை நிர்வாக மாவட்டத்திலிருந்து மேலேயுள்ள மாகாண சபையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*மஹிந்த தேசப்பிரிய,*
*தேர்தல்கள் ஆணையாளர்.*

*தேர்தல்கள் செயலகம்,*
*இராஜகிரிய,*
*2012, செத்தெம்பர் 9.*

*9- 841*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*